தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D., FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி 94890 56730

தொலைபேசி : 0422 - 6611302
நிகரி : 0422 - 2431821
மின்னஞ்சல் : pro@tnau.ac.in

பெறுநர், தேதி : 16-10-2019
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**சர்வதேச மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற போட்டிகளில்
வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கப்பதக்கம் வென்று சாதனை**

44வது தேசிய வளயப்பந்து போட்டிகள் 02.10.2019 முதல் 06.10.2019 முடிய டெல்லியில் நடைபெற்றுள்ளது. தமிழ்நாடு அணியில் வேளாண்மை பல்கலைகழக மாணவிகள் ரம்யா முதுகலை முதலாம் ஆண்டு தோட்டக்கலை மற்றும் கீர்த்தனா இளங்கலை நான்காம் ஆண்டு வேளாண்மை ஆகியோர் இடம் பெற்றனர். ரம்யா பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் தங்கப்பதக்கமும், குழு போட்டியில் வெண்கலப்பதக்கமும் வென்றார். கீர்த்தனா குழு போட்டி மற்றும் இரட்டையர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றார்.

இந்தியா, இலங்கை, மாலத்தீவுகள் ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்ற பிரசிடெண்ட் லீக் கேரம் போட்டிகள் மற்றும் இந்தியா மாலத்தீவு இடையேயான கேரம் டெஸ்ட் தொடர் மாலத்தீவில் அக்டோபர் 5 முதல் 9 வரை நடைபெற்றது. பல்கலை மாணவர் முகேஷ் இளங்கலை முதலாம் ஆண்டு வேளாண்மை இந்திய ஜீனியர் அணியில் இடம் பெற்று 11 சுற்றுக்கள் கொண்ட பிரசிடெண்ட லீக் போட்டியில் 9 புள்ளிகள் பெற்று வெள்ளிப்பதக்கம் வென்றார். டெஸ்ட் தொடரில் 5 – 0 என்ற புள்ளி கணக்கில் மாலத்தீவை வென்று தொடரை கைப்பற்றினார்.

வெற்றி வாகை சூடிய மாணவ மாணாக்கியர்களை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் நீ. குமார், பதிவாளர் முனைவர் அ.சு. கிருஷ்ணமூர்த்தி, முதன்மையர் மாணவர் நல மையம் முனைவர் து. ரகுச்சந்தர், முதன்மையர் வேளாண்மை முனைவர் ம. கல்யாணசுந்தரம் மற்றும் பல்கலைகழக உடற்கல்வி இயக்குனர் முனைவர் ராகவன் ஆகியோர் பாராட்டினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்